ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2382/32 - 2024 මැයි මස 03 වැනි සිකුරාදා - 2024.05.03

*2382/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம்***

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆவது வாசகத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆவது வாசகத்தின்கீழ் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரினால் வகுக்கப்பட்ட கட்டளை.*

**ஹரீன் பிரநாந்து,**
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
2024, மே 03.

**கட்டளை**

1. 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையாக இக்கட்டளை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

***1 ஆவது பகுதி***

தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தில் பதிவு செய்தல்

2. (1) இங்கு II ஆம் உப ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் விளையாட்டு தொடர்பில் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தில் பதிவு செய்வதற்கான அனைத்து விண்ணப்பப்படிவங்கள் -

I. விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் ;

II. இங்கு I ஆம் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “அ” மாதிரிக்கு அமைவாக இருக்க வேண்டும்.


1A - G 41866 — 05 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

III. அத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் ஒப்பமிடப்படப்பட வேண்டும் ; மற்றும்

IV. கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

(அ) இங்கு III ஆம் உப ஆவணத்தில் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் பிரமாணக் குறிப்பின் பிரதி ;

(ஆ) இத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் பெயர், அலுவலக முகவரி மற்றும் தொடர்பு சாதனத்திற்கான தகவல்கள் ;

(இ) இத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தற்போதைய குழு அங்கத்தவர்களின் பெயர், முகவரி, மற்றும் தொடர்புசாதனத்திற்கான தகவல்கள் ;

(ஈ) அக்குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்ட வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(உ) அத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு நிதி வெளிப்பாடு களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ;

(ஊ) அச்சங்கத்துடன் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் பெயர், முகவரி மற்றும் ஏனைய தொடர்பு சாதனத்திற்கான தகவல்கள் உட்பட அவ் இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் குழு அங்கத்தவர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்புசாதனத்திற்கான தகவல்கள்.

2. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்க வேண்டும்.

3. எந்தவொரு தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தில்பதிவு செய்வதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு அவசியப்படக்கூடிய மேலதிக தகவல்களை கோர முடியும்.

4. பதிவு செய்வதற்காக கோரிக்கை விடுக்கப்படும் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தின் சட்டத்தின் ஒழுங்குகளுக்கு மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் திருப்பதியடையும் பட்சத்தில் பதிவுக் கட்டணமாக தேசிய விளையாட்டு நிதியத்திற்கு வைப்பிலிடுவதற்கு ரூபா ஐம்பதாயிரம் (50,000/-) நிதி செலுத்துமாறு உரிய தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்திற்கு அறிவிக்குமாறு அமைச்சரினால் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிக்க முடியும்.

5. பதிவுக்கட்டணம் கிடைத்ததன் பின்னர், பணிப்பாளர் நாயகத்தினால் அத்தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தில் பதிவு செய்ய வேண்டியதுடன் இங்கு I ஆம் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “ஆ” மாதிரிப்படிவத்திற்கு அமைய இருக்க வேண்டிய பதிவு செய்யும் சான்றிதழ் அத்தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு வழங்குவதற்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. இச்சான்றிதழை முன்னர் இரத்து செய்யாத சந்தர்ப்பத்தில் அல்லது இடைநிறுத்தப்படாத சந்தர்ப்பத்தில் அச்சான்றிதழில் உரியதாக குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக அனைத்து நோக்கங்களுக்காகவும் தீர்க்கமான சாட்சிகள் இருக்க வேண்டும்.

7. பணிப்பாளர் நாயகத்தினால் பதிவு செய்வதற்கான கோரிக்கை கிடைக்கப்பெற்று அறுபது நாட்களுக்குள் அக்கோரிக்கைக்கு ஒப்பமிட்டு மற்றும் அதனை சமர்ப்பித்த தலைவருக்கு மற்றும் செயலாளருக்கு அக்கோரிக்கை தொடர்பில் தீர்மானத்தினை அறிவிக்க வேண்டும்.

8. தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தில் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில், மேற்கூறப்பட்ட கட்டணக் கொடுப்பனவிற்குப் பின்னர் கீழ் குறிப்பிடப்பட்ட ஒப்பளவுகளுக்கு அடிப்படையாகக் கொண்டு அச்சங்கம்/சம்மேளனத்தினை வகைப்படுத்தியதன் பின்னர் அச்சங்கம்/சம்மேளனத்தை பதிவு செய்யுமாறு பணிப்பாளர் நாயகத்தினால் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

(i) A தரம்- அங்கத்தவர்கள்/ விளையாட்டுக் கழகம்/ இணை நிறுவனங்கள் 25 அல்லது அதனை விட மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட வருடாந்த புரள்வு ரூபா 50 மில்லியன் அல்லது அதனைவிட மேற்பட்ட,

(ii) B தரம்- அங்கத்தவர்கள்/ விளையாட்டுக் கழகம்/ இணைந்த 15 நிறுவனங்கள் அல்லது அதனை விட மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட வருடாந்த புரள்வு ரூபா 10 மில்லியன் அல்லது அதனைவிட மேற்பட்ட இருப்பினும் ரூபா 50 மில்லியனை விடக்குறைந்த,

(iii) C தரம்- அங்கத்தவர்கள்/விளையாட்டுக் கழகம்/இணை நிறுவனங்கள் எந்தவொரு எண்ணிக்கை கொண்ட வருடாந்த புரள்வு ரூபா 10 மில்லியனை விடக்குறைந்த.

அவ்வாறு இருந்த போதிலும் சர்வதேசப் போட்டிகளின்போது ஏதேனும் தனி நபரின் அல்லது குழுவின் அடைவு மட்டத்தினைக் கருத்திற்கொண்டு அமைச்சரினால் அவ்விளையாட்டுக்கு உரியதாக தேசிய சங்கம் உரியவாறு தரம் உயர்த்தப்படக்கூடும் (உரியவாறு A தரம் அல்லது B தரத்திற்கு)

இக்கட்டளையின் அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் தினம் தொடக்கம் மூன்று வாரங்களுக்குள் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் அமைச்சரின் கருத்தினை வினவி, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பாக மதிப்பீடுகள்/ கௌரவிப்புக்ளை மேற்கொண்டு வகைப்படுத்துவதற்காக 05 அங்கத்தவர்களைவிட குறையாத குழு நியமிக்கப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட குழுவினால் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் வகைப்படுத்தல் தொடர்பாக பணிகளை பூர்த்தி செய்து பரிந்துரையினை அவ் வகைப்படுத்தல் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்ளும் வகையில்ஆவணங்களை தமக்கு சமர்பித்த தினம் தொடக்கம் ஒரு வாரத்திற்குள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். காணப்படும் தரப்படுத்தல்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் தமக்கு அனுப்பப்பட்ட திகதி தொடக்கம் ஒரு வாரத்திற்குள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். காணப்படும் தரப்டுத்தல்கள் இங்கு குறிப்பிடப்பட்டவாறு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை (05) மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் மாற்றங்கள் செய்யப்படாத பட்டசத்தில் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படும்.

9. பணிப்பாளர் நாயகத்தினால் விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனம் தொடர்பாக ஆவணத்தினைப் பேண வேண்டும். இவ்ஆவணம் இங்கு I ஆம் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “இ” மாதிரிக்கு அமைவாக இருக்க வேண்டும்.

## II **ஆம் கட்டளை**

### தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் யாப்பு

3. (1) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்களுக்காக இங்கு III ஆம் ஆவணத்தில் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கிய யாப்பு இருக்க வேண்டியதுடன் அது பணிப்பாளர் நாயகத்தினால் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு இருந்த போதிலும் இக்கட்டளை அமுல்படுத்தப்படுவது ஆரம்பமாகும் தினமன்று ஏதேனும் உரிய விளையாட்டிற்காக பதிவு செய்யப்பட்டுள்ள எவையேனும் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம்.

(i) இங்கு III ஆம் உப ஆவணத்தில் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கிய யாப்பினை பதிவு செய்வதற்காக ; மற்றும்

(ii) தற்போது சர்வதேச தரப்படுத்தல் மட்டம், உரிய கால எல்லைக்குள் எதிர்பாக்கப்பட்ட இலக்கு மற்றும் செயற்சாதனை மட்டத்தினை விருத்தி செய்வதற்கான மூலோபாயங்களை உள்ளடக்கிய எதிர்வரும்பத்தாண்டு கால எல்லைக்கான இணைந்த திட்டத்தின் அங்கீகாரத்திற்காக இக்கட்டளையினை அமுல்படுத்தும் தினம் தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

(2) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்களில் தமது உரிய சர்வதேச விளையாட்டு கூட்டிணைந்த சங்கத்தின் கட்டளைகள், கொள்கைப் பிரகடனம், செயற்பாட்டு ஒழுங்குகள், விதிகள்அல்லது கட்டளைகளுக்கு அமைய தமது யாப்பினைத் தயாரித்தல் அல்லது மறுசீரமைப்புக்கள்மேற்கொள்ளப்பட வேண்டியதுடன்அது தமது விஷேட பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) யாப்பு அங்கீகரிக்கப்பட்ட தினம் தொடக்கம் நாற்பத்தைந்து (45) இவ்யாப்பினை பதிவு செய்வதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

4. அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்களில் அத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின் யாப்பினால் தீர்மானிக்கக்கூடிய உரியவாறு விளையாட்டிற்கு உரிய இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் அல்லது ஏனைய அமைப்புக்களை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

5. (I) (அ) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் கீழ்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் உட்பட தமது யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் அடங்கும் நிறைவேற்று குழுவினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(i) தலைவர் மற்றும் உப தலைவர் ;

(ii) செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் ;

(iii) பொருளாளர் மற்றும் உதவிப் பொருளாளர் :

(அ) A மற்றும் B தரத்தின் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்திற்காக பொருளாளர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர் அல்லது இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் கொண்ட பொருளாளர் அல்லது இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வங்கியியல் மற்றும் நிதி தொடர்பான சான்றிதழ் அல்லது அதற்கு உயரிய சான்றிதழ் இருக்க வேண்டியதுடன் உதவிப் பொருளாளர் நிதி முகாமைத்துவ துறையில் குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவத்தினைக் கொண்ட நபராக இருக்க வேண்டும்.

2. (i) நிறைவேற்றுக் குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களும் பொதுச்சபைக் கூட்டத்தில் நடாத்தப்படும் உத்தியோகத்தர் தெரிவின்போது 4 வருட காலத்திற்காக நியமிக்கப்பட வேண்டும்.

(ii) எவேரனும் உத்தியோகத்தர் ஒருவர்:

(அ) 8 வருட காலத்திற்காக தலைவர் பதவி வகித்து இருப்பின், அவ்வாறான நபரை தலைவராக மீண்டும் தேர்ந்தெடுப்பதற்கு தகமை பெறுவதில்லை. இருப்பினும் அவரை நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராக தேர்ந்தெடுப்பதற்கு தகமை பெறுவார்.

(ஆ) 8 வருட காலத்திற்காக செயலாளர் பதவியினை வகித்து இருப்பின் அவ்வாறான நபரை செயலாளராக மீண்டும் நியமிப்பதற்கு தகமை பெறமாட்டார். இருப்பினும் அவரை நிறைவேற்றுக் குழுவின் தலைவராக அல்லது அங்கத்தவராக தேந்தெடுப்பதற்கு தகமை பெறுகின்றார்.

(இ) 16 வருட காலம் பதவியினை வகித்து இருப்பின் அவ்வாறான நபரை நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராக தேர்ந்தெடுத்து நியமிப்பதற்கு எக்காரணம் கொண்டும் தகமை பெறுவதில்லை.

சந்தேகத்திற்குரியது என்பதனால் தவிர்ந்து இருப்பதற்காக எந்தவொரு நபருக்கும் 16 வருடகால முழுமையான கால எல்லையினை விட கூடுதலான காலம் நிறைவேற்றுக்குழுவின் அங்கத்தவராக பதவி வகிப்பதற்கு முடியாது.

இது எவ்வாறாக இருப்பினும் இவ் ஒழுங்குக்கோவையினை அமுல்படுத்தும் தினமன்று உத்தியோகத்தர் தெரிவின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள தலைவர் உட்பட உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவர்கள் தற்போது நியமனம் பெற்றுள்ள பதவிக்காலம் நிறைவடையும்வரை அப்பதிவியினை வகிப்பதற்கு மேற்கூறப்பட்ட ஒழுங்குக்கோவை தடையாக அமையாது.

(iii) இது எவ்வாறாக இருப்பினும் சட்டத்தின் மூலம் மற்றும் அதன்கீழ் நியமிக்கப்பட்ட எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட குழுவினாலும் அல்லது உரிய சர்வதேச சங்கத்தினால் அல்லது அதன்கீழ் காணப்படும் இணை சர்வதேச சங்கங்களினால் நடாத்தப்பட்ட முறையான பரிசோதனை மூலம் அல்லது தேசிய சங்கத்தின் ஒழுக்காற்றுக் குழுவினால் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று செயற்பாடுகள் காரணமாக அல்லது நீக்கப்பட்ட அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட அல்லது தடைக்கு உட்படுத்தப்பட்ட எவரேனும் உத்தியோகத்தருக்கு அல்லது குழுவின் அங்கத்தவர் அவ்வாறான பதவிக்காக அல்லது குழு அங்கத்துவத்திற்காக மீண்டும் தோந்தெடுப்பதற்கு தகமை பெறுவதில்லை.

(iv) ஏதேனும் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட எந்தவொரு நிறைவேற்றுக்குழு அங்கத்தவருக்கும் சட்டம், ஒழுங்குக் கோவை, கட்டளை மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் யாப்பிற்குப் புறம்பாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் சிறிய பெரும்பான்மையுடனான ஆலோசனையினை பொதுச்சபை கூட்டத்தினை நடாத்தி மற்றும் வாக்கினை பயன்படுத்துவதற்கு உரிமை காணப்படுகின்றது. தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் (2/ 3) மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளின் மூலம் அவ்வாறான யோசனையினை அங்கீகரிப்பதன் மூலம் அல்லது பொதுச்சபைக் கூட்டத்தில் அல்லது பதவிக்காலம் பூரணமடைவதற்கு முன்னர் அவ்வாறான உத்தியோகத்தரை பதவியில் இருந்து நீக்குவதற்கு முடியும்.

(v) எந்தவொரு நபருக்கும் தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தில் ஒன்றைவிட கூடுதலான எண்ணிக்கையில் நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராக ஒரே தடவையில் பதவி வகிக்க முடியாது.

3. தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் பதவிக்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு வெற்றிடமும் விஷேட சபைக் கூட்டத்தில் நிரப்ப முடியும். வேறு எந்தவொரு வெற்றிடமும் வருடாந்த சபைக் கூட்டத்தில் அங்கீகரிப்பதற்கு உட்பட்டு செயற்குழு சபைக் கூட்டத்தில் நிரப்ப முடியும்.

4. எவரேனும் ஒரு நபர் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு /சம்மேளனத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கு அல்லது வேறுமுறையில் கொடுப்பனவு பெறும் அல்லது பெறாத எந்தவொரு பதவியினை வகிப்பதந்கு அல்லது பதவியினை தொடர்ந்தும் வகிப்பதற்கு அல்லது கொடுப்பனவு பெற்றுக்கொள்ளும் அல்லது பெறாத எந்தவொரு பதவியினை வகிப்பதற்கு அல்லது ஏதேனும்தேசிய விளையாட்டுச் சங்கத்தில்/ சம்மேளனத்துடன் இணைந்த கழகத்தில் அல்லது அமைப்பில் பெயரளவு உறுப்பினராக இருப்பதற்கு அல்லது அவர் கீழ்குறிப்பிடப்பட்டவாறு தகமையற்றவராக இருக்க வேண்டும்.

(1) உரிய அதிகாரம் நீதிமன்றத்தினால் நினைவற்ற ஒருவருக்கு அல்லது அவ்வாறான நபராக தீர்மானிக்கப்பட்டு இருப்பின்.

(2) உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் செயலிழந்தவர் அல்லது அவ்வாறான செயலிழந்த நபராக தீர்மானிக்கப்பட்டு இருப்பின்.

(3) கடந்த நான்கு வருட கால எல்லைக்குள் சிறைத்தண்டனைக்கு உட்படுத்த முடியுமான குற்றம் தொடர்பில் அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தினால் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு இருப்பின்.

(4) ஆறு மாதங்களைவிட குறையாத கால எல்லைக்காக சிறைத்தண்டனைக்கு உட்படுத்தக்கூடிய குற்றம் தொடர்பில் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு இருப்பின்.

(5) இதற்கு முன்னர் தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தின் குழுவில் பதவி வகிக்கும் போது அத்தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முறையான பரிசோதனைக்குப் பின்னர் அப்பரிசோதனையின் பயனாக முறையற்ற நிதிசார் குற்றம், முறையற்ற செயற்பாடுகள், ஊழல் செயற்பாடுகள், ஒழுக்கத்தினை மீறும் அல்லது வேறு அவ்வாறான குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்ட இவர் அப்பதவியினை வகிப்பதற்கு தகமையற்றவராக காணப்படும் பட்சத்தில்,

(6) தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தில் பதவி வகிப்பவராக இருக்கும்போது விளையாட்டுச் சட்டத்தின் 32 ஆவது வாசகத்தின்கீழ் எழுத்து மூல அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள மற்றும் விளையாட்டுச் சட்டத்தின்32 (அ), (ஆ), மற்றும் (இ) வாசகத்தினை மீறியமை தொடர்பில் தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனம், விளையாட்டுத்துறை அமைச்சு அல்லது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட முறையான குழுவின் மூலம் நடாத்தப்பட்ட விசாரணையில்குற்றவாளியாக்கப்பட்ட எந்தவொரு நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்:

(7) வேட்புமனு சமர்ப்பிப்பதற்கு முன்னர் இரண்டு வருட கால எல்லைக்குள் ஊடக அமைப்பு ஒன்றில் இணைந்து கொடுப்பனவு பெறும் தொழில்சார் ஊடவியலாளராக அல்லது இலத்திரணியல் அல்லது அச்சு ஊடக பத்திரிகை கலைஞராக ஏதேனும் ஊடக அமைப்பில் அல்லது ஊடக அமைப்பின் உரியமையாளராக அல்லது பயன்பெறுநராக அல்லது இணை உரிமையாளராக அல்லது பிரதான பங்குதாராக செயற்பட்டு இருப்பின்.

(6) உரிய விளையாட்டுக்களில் தேசிய குழாம் அல்லது தேசிய அணியின் போட்டியாளரின் பெற்றோர் அல்லது சகோதர சகோதரியாக இருப்பின்,

(7) வேட்புமனுவினை சமர்ப்பிப்பதற்கு முன்ன இரண்டு வருட கால எல்லைக்குள் அத்தேசிய சங்கத்தின்/சம்மேளனத்தின் தொழில்சார் பயற்றுவிப்பாளராக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பின்,

(8) விளையாட்டு வீரர் ஒருவரின் பிரதிநிதி அல்லது முகாமையாளராக இருப்பின்,

(9) இலங்கையின் பிரசை அல்லாத ஒருவராயின் அல்லது பிரசா உரிமை இரத்து செய்யப்பட்டுள்ளவர்.

(10) வேட்புமனு சமர்ப்பிப்பதற்கு முன்னர்நான்கு ஆண்டுகால எல்லைக்குள் அவ் விளையாட்டிற்குரிய விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டு உதிரிப்பாகங்கள், அல்லது ஏனைய சாதனங்கள்அல்லது உகாரணங்களுக்குரிய தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு சம்மேளனத்திற்கு விற்பனை செய்தல் அல்லது வழங்களில்ஈடுபட்டு இருப்பின் அல்லது விளையாட்டுடன் தொடர்புபட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் அல்லது கற்கை அல்லது விளையாட்டுடன் தொடர்புபட்ட சேவை வழங்களில் ஈடுபட்டு இருப்பின்,

(11) பந்தயம் பிடித்தல், சூதாட்ட விளையாட்டு அல்லது ஓட்டம் பிடிப்பதற்கு ஆர்வம் கொண்ட அல்லது சூதாட்டத்தில் ஈடுபடுவது போன்றவைகளை ஒழுங்கு செய்யக்கூடிய அல்லது அவ்வாறான அமைப்பு அல்லது அமைப்புக்களின் நாளாந்த சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பத்தின் அண்மித்த உறுப்பினராக இருப்பின் (துணைவர், பெற்றோர், சகோதர சகோதரிகள் மகன்அல்லது மகள் அல்லது மருமகள் அல்லது மருமகள் போன்றோர்.

(12) விளையாட்டுத்துறை அமைச்சின் சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது. அதற்கு நியமிக்கப்பட்டுள்ள அரச ஊழியராக இருப்பின்.

(13) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பாளரினால் அல்லது அத்தேசிய சங்கம்/ சம்மேளனத்தினால் தாபிக்கப்பட்டுள்ள அதிகாரம் கொண்ட சபையினால் அல்லது அல்லது தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டுக்கள் அமைப்பினால் அல்லது விதிக்கப்பட்ட தடைக்கு, இடைநிறுத்தப்பட்டுள்ள அல்லது இரத்து செய்வதற்கு உட்பட்டு அந்தந்த கால எல்லையினை கடத்தியிருப்பின் அல்லது வேட்மனு சமர்பிக்கப்படும் தினமன்று அத்தடையின், இடைநிறுத்தல் அல்லது இரத்து செய்யும் கால எல்லையினை பூர்த்தி செய்து இரண்டு வருட கால எல்லை கடந்து இருப்பின்,

(14) வேட்புமனு சமர்பிப்பதற்கு நான்கு வருடகால எல்லைக்குள் ஊக்க மருந்து பயன்பாடு, ஊழல், பந்தயம் பிடித்தல் மற்றும் உள்ளக தகவல்களின் முறையற்ற பயன்பாடுகள் தொடர்பில் அவருக்கு எதிராக அத்தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தின் ஊக்கமருந்து தடுப்பு அல்லது ஒழிப்பு சபையினால் அல்லது இலங்கை ஊக்கமருந்து ஒழிப்பு முகவர் நிறுவனத்தினால் அல்லது சர்வதேச விளையாட்டு அமைப்பினால் அல்லது தேசிய சங்கத்துடன் இணைந்துள்ள சம்மேளனத்தினால் அல்லது உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் அல்லது விதிக்கப்பட்ட தண்டனையின் கீழ் இருப்பின் அல்லது அத்தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தினால் அல்லது சர்வதேச அமைப்பு அல்லது உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் அல்லது விதிக்கப்பட்ட தடைக்கு, இடைநிறுத்தலுக்கு அல்லது இரத்து செய்வதற்கு கட்டுப்பட்டு இருப்பின்:

(15) விளையாட்டுத்துறை அமைச்சரின் அங்கீகாரம் அல்லது இணக்கத்துடன் விளையாட்டு தொடர்பிலான பணிகளுக்காக சர்வதேச விளையாட்டு விழாவில் தேசத்தினை பிரதிநித்துவப்படுத்திய நபராக உரிய கால எல்லைக்குள் மீண்டும் இலங்கைக்கு வருகை தராத நபராக இருப்பின்:

(16) பாராளுமன்ற உறுப்பினர் அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சிமன்ற நிறுவனத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது பெயர்குறிப்பிடப்பட்ட உறுப்பினராக இருப்பின்:

(17) அத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் உத்தியோகத்தர் தெரிவுக்குழுவின் அங்கத்தவராக இருத்தல்.

(i) உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையான நிதி ஆண்டு நிறைவடைந்து 2 மாதங்களுக்குள் குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வு நிதி வெளிப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு தவறிய அல்லது அவ்வாறு மேற்கொள்வதனை தவறியுள்ள தேசிய விளையாட்டு சங்கம்/ சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் அல்லது காசோலையில் கையொப்பம் இடப்படும் உத்தியோகத்தர் அல்லது ஏனைய பொறுப்பு கொண்ட உத்தியோகத்தராக பதவி வகித்துள்ள நபர்தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தினால் அல்லது விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அல்லது விளையாட்டுத்துறை அமைச்சினால் அல்லது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விசாரணை மூலம் குற்றவாளியாக்கப்பட்டு இருப்பின்:

(ii) முறையான குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது நிதி ஆண்டு நிறைவடைந்து 02 மாதங்களுக்குள் அல்லது உரிய தினத்திற்குப் பின்னர் கணக்காய்வாளருக்கு சமர்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கை தொடர்பில் முறையற்ற பயன்பாடு அல்லது நிதி மோசடி தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்ட நிறைவேற்றுக்குழுவின் அங்கத்தவராக இருப்பின்: முறையான குழு என கருதப்படுவது தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் பொதுச்சபை கூட்டத்தின் மூலம் அல்லது விஷேட பொதுச்சபைக் கூட்டம்

அல்லது நிறைவேற்றுக்குழு அல்லது சங்கத்தின் ஒழுக்காற்றுக்குழு அல்லது அவ்வாறு இன்றேல் விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது விளையாட்டுத்துறை அமைச்சு அல்லது விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாகும்.

(iii) அந்தந்த நிதி ஆண்டு நிறைவடைந்து 02 மாதங்களுக்குள் குழுவினால் சான்றுப்படுத்தப்பட்ட கணக்காய்வு நிதி வெளிப்பாடு சமர்பிக்கப்படாத தேசிய விளையாட்டுச் சங்கம் /சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், திறைசேரி அல்லது ஏனைய காசோலை கையொப்பம் இடும் உத்தியோகத்தர் பதிவி வகிப்பவர் தொடர்பில் விசரணைகளை நடாத்தி குற்றவாளியென தீர்மானிக்கப்படும்வரை அவ்வாறான நபருக்கு எதிராக வாக்கெடுப்பு ஆணடில் பதவிக்காக வேட்மனு சமர்ப்பிப்பதற்கு அனுமதி இல்லை.

(5) ஏதேனும் முறையில் நேரடியாக அல்லது மறைமுகமாக பெறுகை தொடர்பில் இணைப்பினை ஏற்படுத்தும் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தின் குழுவின் அனைத்து பதவி வகிப்போரும் வருடாந்த அடிப்படையில் தமது இணைப்புக்களின் தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(6) அவ்ஒழுங்குவிதிகளை மீறுவது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது. நிறைவேற்றுக் குழுவின் உத்தியோகத்தர் இதன் ஒழுங்குவிதிகளை மீறுவதாக திருப்பதியடைந்ததன் பின்னர் பணிப்பாளர் நாயகத்தினால் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் அவ்உத்தியோகத்தருக்கு எதிராக கீழ்குறிப்பிடப்பட்டவாறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(i) அவ்உத்தியோகத்தாரை அவ்வாறான தேசிய சங்கத்தின்/சம்மேளனத்தில் இருந்து நீக்குதல், எரேனும் நபர் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் ஒன்றைவிட மேற்பட்ட எண்ணிக்கை பதவி வகிப்பதாயின், அவ்உத்தியோகத்தர் அச்சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் குழுக்களில் இருந்து நீக்குதல்.

(ii) அவ்வாறான உத்தியோகத்தருக்கு மூன்று வருடத்திற்கு (3) குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு (5) மேற்படாத காலத்திற்காக எந்தவொரு தேசிய விளையாட்டுச் சங்கம் சம்மேளனத்தின் பதவிகளை வகிப்பதற்கு தடைவிதித்தல்.

(iii) விளையாட்டுச் சட்டத்திற்கு அமைய மேலதிகமாக பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு பரிந்துரை வழங்குதல்.

## III ஆம் பகுதி

### தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்

6. அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனத்திற்கு கீழ்குறிப்பிடப்பட்ட பணிகள், அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் காணப்பட வேண்டும்.

(i) இலங்கையின் அனைத்து மாகாணத்திற்கும் அனைத்து மட்டங்களிலும் கீழ்குறிப்பிடப்பட்ட பணிகள், அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் காணப்பட வேண்டும்.

(ii) உரிய விளையாட்டிற்காக விளையாட்டு வீரர்களின் பங்கேற்பினை விருத்தி செய்யும் நோக்குடன் அவ்விளையாட்டினை ஊக்குவிப்பதற்கு மற்றும் பிரபல்யப்படுத்துவதற்கு மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் மற்றும் தரப்படுத்தலை எட்டுவதற்காக தேவையான வசதிகளை விருத்தி செய்தல்.

(iii) அவ்விளையாட்டின்தரம்சர்வதேச தரப்படுத்தல்மட்டத்தினை மேம்படுத்தல்.

(iv) தேசிய குழுவின்செயற்சாதனை மட்டத்தினை மேம்படுத்தல்.

(v) அவ்விளையாட்டிற்காக சிறந்த திறமை கொண்ட அனைத்து வயதுப் பிரிவினருக்கும் ஆட்களை அடையாளப்படுத்தும் அனைத்து முறைகள் மற்றும் செயற்பாடுகள் மூலம் அவர்களுக்கு உதவிகளை வழங்குதல்.

(vi) அமைச்சரினால் நியமிக்கப்படும் தேசிய தெரிவுக்குழுவினால் உரிய சர்வதேச விளையாட்டுச் சம்மேளனத்தின் மூலம் உரியவாறு குறிப்பிடப்பட்ட தேர்ந்தெடுக்கும் ஒப்பளவுகளை உரியவாறு கருத்திற்கொண்டு விளையாட்டு வீரர்களை தேர்ந்தெடுப்பதற்காக மற்றும் பணிப்பாளர் நாயகத்துடன் இணைப்பு செயற்பாடுகளை மேற்கொண்டு சர்வதேச அல்லது வலய விளையாட்டு நிகழ்வுகளை பிரதிநித்துவப்படுத்துவதற்காக நெகிழ்வுத் தன்மையுடன் தெரிவு ஒப்பளவுகளை வகுத்தல்.

(vii) நிருவாகத்தின் போது மற்றும் செயற்பாட்டின் போது நெகிழ்வுத் தன்மையினை உறுதிப்படுத்தல்.

(viii) விளையாட்டு வீரர்களின் இயலுமை மற்றும் திறனை விருத்தி செய்வதற்காக பயிற்சி வேலைத்திட்டங்களை வழங்குதல்.

(ix) விளையாட்டு வீரர்களின் சுய விபரங்கள், பங்கேற்ற போட்டி நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், போட்டித் தொடர்களைப் பிரதிநிதித்துவப்படுதிய குழு, அவர்களின் செயற்சாதனைகள் தொடர்பாக மற்றும் தெரிவு, தரப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தெரிவு, தரப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல்களில் அடங்கும் விளையாட்டு புள்ளிவிபரங்கள் கூட்டிணைப்பை பயன்படுத்துவத்துவதன் மூலம் உரிய திறன் கொண்ட மெய்வல்லுநர் விளையாட்டு வீரர்கள் அறிமுகப்படுத்தும் முறைமையினை முன்னெடுத்தல்.

(x) நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளல்.

(xi) தற்போது சர்வதேச வகைப்படுத்தல் மட்டங்கள், கால எல்லைக்குள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயற்சாதனை மட்டங்களை விருத்தி செய்யும் மூலோபாயங்கள் உட்பட பத்தாண்டு கால எல்லைக்கான இணைந்த திட்டங்களை வகுத்தல்.

(xii) எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினை வகுத்தல் மற்றும் அச்செயற்பாட்டுத் திட்டம் அமுலில் உள்ள ஆண்டு நிறைவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.

(xiii) குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட நிதி வெளிப்பாடுகள் அந்தந்த நிதி ஆண்டு நிறைவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல்.

(xiv) வருடந்த பொதுச்சபைக் கூட்டதினை நடாத்துதல்: மற்றும்

(அ) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் உத்தியோகத்தர் தெரிவு நிறைவேற்றுக்குழு நிமயமனம் பெற்றவுடன் நிறைவேற்றுக் குழுவினால் தொழில்நுட்ப குழுவின், நிதிக் குழுவின் மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் அங்கத்தவர்கள் நான்கு ஆண்டு (04) காலத்திற்காக தேர்ந்தெடுப்பதற்காக அனைத்து அங்கத்துவ இணைந்த நிறுவனத்தினை அறிவுறுத்தி, வேட்பமனுவினைப்பெற்று தகமைக்கு அமைய நியமித்தல்.

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத் தினங்களின் தெரிவுக்குழு இரண்டு வருட (02) கால எல்லைக்கு நியமிப்பதற்காக உரிய தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனம் தமது விளையாட்டுச் சங்கத்திற்கு / சம்மேளனத்துடன் இணைந்த அனைத்து அங்கத்துவ நிறுவனங்களையும் உரியவாறு அறிவுறுத்தி வேட்பு மனுவினைப் பெற்று நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் மூலம் மிகவும் பொருத்தமான பத்து அங்கத்தவர்கள் (10) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்புமனு ஆவணத்துடன் விண்ணப்படிவம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் தேசிய தெரிவுக்குழுவிற்கு அனுப்புதல், தேசிய தெரிவுக் குழுவினால் அவ்வேட்புமனு தொடர்பாக தமது பரிந்துரை செய்யப்பட்ட குழு வேட்புமனுவை அமைச்சின் செயலாளர் ஊடாக அங்கீகாரத்திற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்புதல்.

ஏதேனும் தேசிய சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு மேற்கூறப்பட்ட கட்டளையுடன் ஒப்பீடாகுவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில், தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவினால் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஊடாக விடுவிப்பதற்கு கோரிக்கை விடுக்க முடியும்.

(இ) உத்தியோகத்தர் தெரிவுக்குழுவின் அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக விஷேட பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்துதல்.

(xv) முன்னைய ஆண்டில்/ ஆண்டுகளில் கணக்காய்வாளரினால் கணக்காய்வு நிதி வெளிப்பாடுகள்/ வெளிப்பாடுகள் அங்கீகரிப்பதற்கு இருப்பின் அவற்றுடன் வருடாந்த அறிக்கை தமது வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் அல்லது விஷேட பொதுச் சபைக் கட்டத்தில் சமர்ப்பித்தல் ;

(xvi) ஆண்டு தோறும் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்குப் பின்னர் ஒரு மாதத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :

(அ) தேவையான சந்தர்ப்பங்களில், அத்தேசிய விளையாட்டுச்சங்கத்திற்கு /சம்மேளனத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் பதவி வகிப்போரின் சுய விபரங்கள்.

(ஆ) சமூகமளிப்பு ஆவணத்தின்பிரதியுடன்வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தின் அறிக்கைகளின் உறுதிப்படுத்தப் பட்ட பிரதி.

(இ) வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்ட நிதி ஆண்டிற்கான கணக்காய்வு நிதி வெளிப்பாட்டில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் அதன் கணக்காய்வு நிதி வெளிப்பாடு வருடாந்த பொதுச்சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதற்கான சாட்சி.

(ஈ) அவ்வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர் தெரிவுக் குழுவின் அங்கத்தவர்களின் பெயர் மற்றும் தொடர்புசாதனத்திற்கான தகவல்கள்.

(உ) போட்டித் தொடர் தொடர்பில் நாட்காட்டி மற்றும் திறமையினை அடையாளம் காணும் வேலைத்திட்டம் உட்பட யாப்பில் குறிப்பிட முடியுமான கால எல்லைக்கான அபிவிருத்தித் திட்டங்கள்.

(ஊ) அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி உதவிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான மேற்பார்வைக்கான தேசிய விளையாட்டுச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஈராண்டு வருடாந்த முன்னேற்ற அறிக்கை.

(xvii) பெயர் குறிப்பிடப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலுடன் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்களிப்பதற்காக உரிமை கொண்டுள்ள அங்கத்தவர்களின் பெயர்பட்டியலும், முன்னைய ஆண்டில் கணக்காய்வு நிதி வெளிப்பாட்டில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் உள்ளடக்கி அறிவிப்பு வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு குறைந்தபட்சம் 21 நாட்களுக்கு முன்னர் அதன் இணை நிறுவனத்திற்கு சமர்பித்தல் ;

(xviii) உரிய விளையாட்டில் ஈடுபட்டுள்ள இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களை பதிவு செய்தல் மற்றும் இங்கு 1 ஆவது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “ஈ” மாதிரிக்கு அமைய இருக்க வேண்டிய ஆவணத்தினை முன்னெடுத்தல் ;

(xix) அவ் இணை நிறுவனத்திற்கு விளையாட்டுக் கழகத்திற்கு அல்லது ஏனைய அமைப்பிற்கு பதிவுச்சான்றிதழை வழங்குதல் ;

(xx) (அ) தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தின்கீழ் அலகான வலய விளையாட்டுக் கழகங்கள் தொடக்கம் மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்கள் வரை தேசிய விளையாட்டுச் சங்கப் போட்டித் தொடர்களில் 02 இற்கு குறையாத அளவு காணப்படுகின்றதா, விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் பயிற்றுவிக்கப்படுகின்றதா, நிலையான விளையாட்டு குழாம் பராமரிக்கப்படுகின்றதா மற்றும் மாவட்ட சங்கத்தினால் உள்நாட்டு விளையாட்டுக் கழகங்களை முறையாக மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னோடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பாக கண்டறிதல் மற்றும் விளையாட்டுப் பணிப்பாளருக்கு அறிக்கைப்படுத்தல் ;

(ஆ) மாகாண விளையாட்டுச் சங்கத்தினால் தமது அதிகாரப் பிரதேசத்திற்குள் வருடாந்தம் மாவட்டங்களுக்கு இடையிலான 02 விளையாட்டுப் போட்டித் தொடர்களை விட குறையாத அளவு நடாத்துதல், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை பயிற்றுவித்தல் மற்றும் நிலையான மாகாண விளையாட்டுக் குழாமை முன்னெடுத்தல், அதிகாரப் பிரதேசத்திற்குள் உரிய விளையாட்டினை ஊக்குவித்தல் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கத்தினால் மாவட்ட விளையாட்டுச் சங்க மேற்பார்வை மற்றும் முன்னோடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பான விபரங்களை விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கைப்படுத்தல் ;

(xxi) உரிய தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு சட்ட ரீதியாக வகுக்கப்பட்ட பெறுகை வழிகாட்டல் ஆலோசனைகள் இல்லாத சந்தர்பங்களில் பெறுகை மற்றும் கேள்வி வழங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளை பின்பற்றுதல் ;

(xxii) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ரீதியில் கிடைக்கும் ஏதேனும் நிதியம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ள பெறுகை ஒழுங்கு விதிகளை பின்பற்றுதல் ;

(xxiii) ஏதேனும் விளையாட்டு நிகழ்வினை நடாத்துவதற்காக தேவையான அனைத்து நிதியம் ஏதேனும் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்திற்கு உரியதாக இன்றி இருப்பின் இலங்கையில் ஏதேனும் அல்லது விளையாட்டு நிகழ்வினை நடாத்துவதற்காக விளையாட்டுத்துறை அமைச்சின் அங்கீகாரத்துடன் சர்வதேச சம்மேளனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளல்.

(xxiv) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் குழுக் கூட்டம் மற்றும் அதன் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விளையாட்டு ஒழுங்குவிதி மேற்பார்வைக்கான ஒழுங்குவிதிகளை வகுத்தல்.

(xxv) தேவையான சந்தர்ப்பங்களில் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் பணியாள் சபைக்கு தேவையான உத்தியோகத்தர் எண்ணிக்கையினை நியமித்தல்.

(xxvi) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கும்/ சம்மேளனத்திற்கும்அவர்களின் விளையாட்டிற்குரிய விஷேட தேவைகள் கொண்ட (உடல் ரீதியிலான அங்கவீனம், கட்புலன் மற்றும் செவிப்புலன் போன்றவற்றுடன்) நபர்களை உள்ளடக்கியவாறு இணைந்த விளையாட்டுச் சங்கங்களை இணைக்கும் பொறுப்புக்கள் காணப்படுன்றன.

(xxvii) விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கம், மாகாண விளையாட்டுச் சங்கம் அல்லது மாவட்ட அல்லது மாகாண சங்கத்திற்குரிய இணைந்த அல்லது மாவட்ட அல்லது மாகாண விளையாட்டுச் சங்கத்திற்கு, தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு /சம்மேளனத்துடன் இணைந்த விளையாட்டுக் கழகம் மற்றும் சமூக அமைப்புக்களின் உத்தியோகத்தர் தெரிவு உட்பட அனைத்து செயற்பாடுகள் தொடர்பாகவும் விபரங்கள் உரிய தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு /சம்மேளனத்தினால் வருடாந்த விளையாட்டுப் பணிப்பாளாருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(xxviii) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய மற்றும் சர்வதேச நிதி கொடுக்கல் வாங்கல்களை எட்டும்போது, அத்தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு நாட்டின் நிதி ஒழுக்கம் மற்றும் தொடர்ச்சிக்கு அமைவாக நிதி ஊழலுக்கு எதிரான மற்றும் நிதி தூய்மைப்படுத்தலுக்கு எதிராக சட்டங்களுக்கு உட்பட்டு பல்கலைக்கழகத்தினால் மற்றும் இணக்கத்துடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. (i) அனைத்துதேசியவிளையாட்டுச்சங்கம்/சம்மேளனத்திற்குதெரிவிக்குழுவினை நியமிப்பதுதொடர்பில்பரிந்துரையினை சமர்ப்பிக்கும் அதிகாரம் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவிற்கு மாத்திரம் பொறுப்பளிக்கப்படுவதுடன், தெரிவுப் பரிசோதனை நடைபெறும் தினம், இடம், உரிய விபரங்கள் மற்றும் தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பளவுகள் தொடர்பான தகவல்களை 14 நாட்களுக்கு முன்னர் விளையாட்டு வீரர்களுக்கு அறிவிக்க வேண்டும். அனைத்து விபரங்களின் பிரதியினை அன்றைய தினம் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவிற்கு எழுத்து மூலம் சமர்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான தகவல்களை சமர்ப்பிக்காத தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனங்களின் தெரிவுப் பரிசோதனைகள் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனங்களின் தலைவர்கள்/ செயலாளர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் தனிப்பட்ட நோக்கத்திற்கு அமைய நடைபெறும் தெரிவுப் பரிசோதனையினை இரத்து செய்வதற்கு தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(ii) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தின் தெரிவுப் பரிசோதனையினை நடாத்துவதற்கு 28 நாட்களுக்கு முன்னர் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவிற்கு தெரிவு ஒப்பளவுகளை சமர்பிக்க வேண்டும். மற்றும் தெரிவு ஒப்பளவுகளுக்கு அவர்களின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் விளையாட்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும். அத்துடன் தெரிவுப் பரிசோதனை இறுதியில் அதன் பெறுபேறுகள் அவர்களின் இணையத் தளத்தில் பிரசுரித்து தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் சரியான பெயர்ப்பட்டியல் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்போட்டியின் பெறுபேறுகள் தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை நேரடியாக தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு சமரப்பிக்கப்பட வேண்டும். எதிர்ப்புக்கள் கருத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறு ஆவணத்தினை அனைத்து விபரங்களுடன் தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனங்களின் இணையத்தளத்திற்கு அன்றைய தினம் வெளியிடப்பட வேண்டும்.

(iii) தெரிவுப் பரிசோதனைக்காக விளையாட்டுத்துறை அமைச்சின் உரிய தேசிய விளையாட்டுக்குப் பொறுப்பான செயற்திட்ட உத்தியோகத்தரின் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அதற்கு அமைய தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(iv) தெரிவுப் பரிசோதனை இறுதியில் அத்தினத்தில் அல்லது அதற்குப் பின்னைய தினத்தில் தேசிய தெரிவுக் குழுவிற்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்களை எழுத்து மூலம் வழங்க வேண்டும் :

(அ) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தலைவர் அல்லது செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தெரிவுப் பரிசோதனைக்காக பங்கேற்ற தெரிவுக்குழு அங்கத்தவர்களின் சமூகமளிப்புப் படிவம்.

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் தெரிவுக்குழு அங்கத்தவர்களினால் கையொப்பம் இடப்பட்ட தெரிவுப் பரிசோதனைக்காக பங்கேற்ற விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளின் பெயர்ப்பட்டியல்.

(இ) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தெரிவுக் குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவாறு விபரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் அவர்களுக்காக புள்ளி வழங்கும் பத்திரம்.

(ஈ) பங்கேற்ற நிகழ்வுகள் தொடர்பான விபரங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் பொறுப்பேற்கப்பட்ட இடம் மற்றும் மேலதிக விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் உட்பட அவர்களின் சரியான பெயர்ப்பட்டியல்.

(v) தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனங்களின் தெரிவுப் பரிசோதனை இறுதியில் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவிற்கு கிடைக்கும் அனைத்து மேன்முறையீடுகள்/ முறைப்பாடுகள் தொடர்பில் விசாரனைகளை / ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் பரிந்துரையினை சமர்ப்பிக்கும் அதிகாரம் இதன் (1547) பகுதியில் உள்ளங்கியுள்ள கட்டளைகளுக்கு உட்பட்டு தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

(vi) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் நிறைவேற்றுக் குழுக்களில் இடம்பெற்ற அங்கத்துவ மாற்றங்கள் தொடர்பாக தேசிய தெரிவிற்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

(vii) தேசிய தெரிவுக் குழுவினால் பரிந்துரை செய்யப்படும் உரிய தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனங்களின் தெரிவுக் குழுவிற்கு நியமனக் கடிதத்தினை வழங்கும் போது அதன் பிரதியினை விளையாட்டுத்துறை அமைச்சினால் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

(viii) தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவினால் அனைத்து தேசிய குழாம்களில் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் விபரங்கள் தொடர்பான புள்ளிவிபர களஞ்சியத்தினை தயாரித்து சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்பட வேண்டும். அது தொடாபில் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளன குழாம்களில் உள்ள அனைத்து விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் திறமை மற்றும் சுய விபரத் தகவல்கள் தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவுக்கு அனுப்ப வேண்டும். தேசிய குழாமை பெயரிட்டதன் பின்னர் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை சேர்த்துக் கொள்ளல்/ நீக்குவது தொடர்பான தகவல்கள் தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவுக்கு

(ix) தேசிய விளையாட்டுத் தெரிவுக் குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் எந்தவொரு சர்வதேச போட்டித் தொடருக்காக வேட்புமனு வழங்கப்படக் கூடாது என்பதுடன் அவ்வாறான சர்வதேச போட்டித் தொடருக்காக பயிற்றுவிப்பாளர்கள், முகாமையாளர்கள், உதவிப் பயிற்றுவிப்பாளர்கள்/ விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், இயன் மருத்துவ பரிந்துரையினை மேற்கொள்ளும்போது பொருத்தமான முறைகளைப் பின்பற்ற வேண்டியதுடன் கீழ்குறிப்பிடப்பட்ட ஒப்பளவுகளுக்கு அமைய தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(அ) இது வரை விளையாட்டுத் துறைக்கு கிடைத்த பங்களிப்பு

(ஆ) விளையாட்டுத் துறையில்அவர்களின் தற்போதைய செயற்சாதனை

(இ) உரிய விளையாட்டின் அறிவு, விளக்கம் மற்றும்அனுபவம்

(ஈ) விளையாட்டு வீரர்/பயிற்றுவிப்பாளராக காண்பிக்கப்பட்ட திறமைகள்

## IV ஆவது பகுதி

## தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தீர்மானம் அல்லது செயற்பாடுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் ஒழுங்குவிதி முறைகள்

**குறைகேள் அதிகாரி**

8. (1) விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தேசிய விளையாட்டுச் சபையின் கருத்தினை வினவி பொருத்தமான நபரை விளையாட்டு குறைகேள்அதிகாரியாக நியமிக்க வேண்டும். அக்குறைகேள் அதிகாரி இலங்கை நிருவாக சேவையின் (SLAS) (1) தரத்தின்/விஷேட தரத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தராக இருக்க வேண்டும். குறைகேள் அதிகாரியாக நியமிக்கப்படும் நபர் மூன்று வருட காலங்கள் பதவி வகிப்பதுடன் மேலும் மூன்று வருட காலத்திற்காக மீண்டும் நியமனம் பெறுவதற்காக தகைமை பெறுவார். எந்தவொரு நபரும் ஆறு வருடத்திற்கு மேற்பட்ட காலம் குறைகேள் அதிகாரியாக பதவி வகிக்கக் கூடாது.

(2) விளையாட்டு குறைகேள் அதிகாரியின் கடமைப் பொறுப்பாக அமைவது பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தின் ஏதேனும் தீர்மானத்தினால் அல்லது செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பில் சுயாதீன மற்றும் பக்கச் சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வதாகும். பாதிக்கப்பட்ட நபர் அவ்வாறான தீர்மானத்தினால் அல்லது செயற்பாட்டினால் 14 நாட்களுக்குள் விளையாட்டு குறைகேள் அதிகாரிக்கு எழுத்து மூலம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். நியாயமான மற்றும் பக்சார்பற்ற மீளாய்விற்குப் பின்னர் விளையாட்டு குறைகேள் அதிகாரியினால் அக்கோரிக்கை கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் ஊடாக விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) குறைகேள் அதிகாரியின் ஊதியம் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் விளையாட்டுத்துறை அமைச்சரின் செயலாளரின் கருத்தினை வினவி தீர்மானிக்கப்படுவதுடன் தேசிய விளையாட்டு நிதியம் ஊடாக கொடுப்பனவு செலுத்தப்படும்.

(4) பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தினால் தீர்மானிக்கப்படும் அல்லது செயற்பாட்டிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவுக்கு மேற்கொள்ளும் எந்தவொரு மேன்முறை யீட்டிற்காகவும் ஆரம்ப நிபந்தனையாக இருக்க வேண்டும். குறைகேள் அதிகாரியினால் பரிந்துரை வழங்கப்படும் வரை மேன்முறையீட்டினை மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய கால எல்லை உரியதாக அமையாது.

(5) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது பணிப்பாளர் நாயகம் விளையாட்டு குறைகேள் அதிகாரியின் பரிந்துரைகளுக்கு கட்டுப்படுவதில்லை.

(6) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளன குறைகேள் அதிகாரியின் இணைப்புத் தகவல்களுடன் குறைகேள் அதிகாரியின் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவ் அங்கத்தவர்களுக்கு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வருடாந்தம் அறிவுறுத்தப்பட வேண்டும்.

**மேன்முறையீட்டு ஆலோசனைக்குழு**

9. (1) விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் 10 அங்கத்தவர்களைக் கொண்ட மேன்முறையீட்டு ஆலோசனைக்குழு நியமிக்கப்பட வேண்டும். மேன்முறையீட்டு ஆலோசனைக்குழு (3) வருட காலத்திற்காக பதவி வகிப்பதுடன் மேலும் மூன்று வருட காலத்திற்காக மீண்டும் நியமனம் பெறுவதற்கு தகைமை பெற முடியும். எந்தவொரு நபரும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவில் அங்கத்தவராக (6) வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கக்கூடாது.

(2) அமைச்சரினால் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிற்காக செயலாளர் நியமிக்கப்பட வேண்டும். அச்செயலாளர் (3) வருட காலத்திற்காக பதவி வகிப்பதுடன் மேலும் (3) கால எல்லைக்காக நியமனம் பெற முடியும். எந்தவொரு நபரும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவில் செயலாளராக (6) வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கக் கூடாது.

(3) மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவில் அங்கத்தவர்களில் மற்றும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளரின் ஊதியம் விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் விளையாட்டுத்துறை அமைச்சரின் செயலாளரின் கருத்தினை வினவி தீர்மானித்து தேசிய விளையாட்டு நிதியம் ஊடாக செலுத்தப்பட வேண்டும்.

(4) குறைகேள் அதிகாரியின் பரிந்துரை காரணமாக பாதிக்கப்பட்ட நபருக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஊடாக மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பிக்க முடியும். மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் விளையாட்டுச் சட்டத்தின் 30 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டவாறு அமைச்சருக்கு மேற்கொள்ளப்படும் மேன்முறையீட்டிற்கு சமமான தாக்கம் செலுத்தப்படும்.

(5) இவ்வாறான மேற்பார்வை குறைகேள் அதிகாரியின் பரிந்துரை/பரிந்துரை வழங்கிய 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(6) இதன் மேன்முறையீட்டினை உறுதிப்படுத்துவதற்காக உரிய அனைத்து சாட்சிகள் மற்றும் ஏனைய தேவையன விடயங்களும் அமைச்சின் சார்பிற்கு செலுத்தப்பட்ட இலங்கையின் செல்லுபடியாகும் நிதியில் ஐம்பதாயிரம் (ரூபா 50,000/-) A தரத்தின் தேசிய விளையாட்டுச் சங்கம் /சம்மேளனத்திற்காக இருபத்தையாயிரம் (ரூபா 25,000/-) B தரத்தின் தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்திற்காகவும், பதினையாயிரம் (ரூபா 15,000/-) தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்திற்காகவும் மீள செலுத்தப்படாத நிதி செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் அம்மேன்முறையீட்டுடன் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு நான்கு பிரதிகள் (04) களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேன்முறையீட்டிற்காக செலுத்தப்படும்

அனைத்து நிதியும் தேசிய விளையாட்டு நிதியத்திற்கு வைப்பிலிடப்பட வேண்டும். விளையாட்டு வீரரினால் அவரின் விளையாட்டுத் தெரிவு அல்லது விளையாட்டுக் கொடுப்பனவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரும் மேன்முறையீடும் எந்தவொரு கொடுப்பனவினாலும் விடுவிக்கப்படும்.

(7) உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட மேன்முறையீடு கொடுப்பனவு செலுத்தப்பட்ட தினம் தொடக்கம் 7 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் உருவாகும் பட்சத்தில் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் அம்மேன்முறையீடு மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிற்கு நேரடியாக அனுப்ப வேண்டும்.

(8) மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவினால் தமக்கு பொருத்தமானது என்று கருதப்படும் மேலதிக தகவல்களை கோர முடியும் என்பதுடன் அம்மேன்முறையீடு கிடைக்கப்பெற்று 14 நாட்களுககுள் அவர்களின் பரிந்துரையுடன் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஊடாக விளையாட்டிற்கு பொறுப்பான அமைச்சருக்கு அனுப்ப வேண்டும்.

(9) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கு கட்டுப்படுவதில்லை.

## V ஆம் பகுதி

### கட்டளையினை நீக்குதல்

10. விளையாட்டுச் சட்டத்திற்கு அமைய அமைச்சரினால் வகுக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளையின் கீழ் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட எவற்றிற்கும் பாதிப்புக்கள் இல்லாத வகையில் நீக்கப்படுகின்றது :

2016, ஒற்றோபர் 27 ஆந் திகதிய இலக்கம்1990/23 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி.

அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட தேசிய விளையாட்டுச் சங்கக் கட்டளை.

2017, பெப்புருவரி 13 ஆந் திகதிய இலக்கம் 2009/13 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2017, மே 05 ஆந் திகதிய இலக்கம்2017/41 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2018, செத்தெம்பர் 22 ஆந் திகதிய இலக்கம் 2089/56 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2018, ஒற்றோபர் 18 ஆந் திகதிய இலக்கம் 2093/39 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2019, சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் 2105/38 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2019, யூன்18 ஆந் திகதிய இலக்கம் 2128/8 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2019, ஓகத்து 23 ஆந் திகதிய இலக்கம் 2137/85 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2020, மாச்சு 10 ஆந் திகதிய இலக்கம் 2166/9 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2020, ஏப்பிறல் 30 ஆந் திகதிய இலக்கம் 2173/13 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2020, மே 27 ஆந் திகதிய இலக்கம் 2177/8 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2020, யூலை 31 ஆந் திகதிய இலக்கம் 2186/31 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2020, செத்தெம்பர் 18 ஆந் திகதிய இலக்கம் 2193/55 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

2020, செத்தெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2194/4 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.

*2020, செத்தெம்பர் 23 ஆந் திகதிய இலக்கம் 2194/54 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2020, நவெம்பர் 19 ஆந் திகதிய இலக்கம் 2202/17 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2020, திசெம்பர் 23 ஆந் திகதிய இலக்கம் 2207/7 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2021, பெப்புருவரி 19 ஆந் திகதிய இலக்கம் 2215/47 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2021, யூன் 01 ஆந் திகதிய இலக்கம் 2230/7 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, மாச்சு 23 ஆந் திகதிய இலக்கம் 2272/40 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, மே 26 ஆந் திகதிய இலக்கம் 2281/36 கொண்ட அதி விஷேட வாத்தமானி அறிவித்தல்.*

*2022, மே 27 ஆந் திகதிய இலக்கம் 2281/37 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, செத்தெம்பர் 08 ஆந் திகதிய இலக்கம் 2296/19 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, செத்தெம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 2197/94 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, செத்தெம்பர் 22 ஆந் திகதிய இலக்கம் 2298/50 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, நவெம்பர் 05 ஆந் திகதிய இலக்கம் 2304/88 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, திசெம்பர் 14 ஆந் திகதிய இலக்கம் 2310/26 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2022, திசெம்பர் 14 ஆந் திகதிய இலக்கம் 2310/28 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2023, மே 08 ஆந் திகதிய இலக்கம் 2331/10 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2023, மே 31 ஆந் திகதிய இலக்கம் 2334/22 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2023, யூலை 28 ஆந் திகதிய இலக்கம் 2342/48 கொண்ட அதி விஷேட வாத்தமானி அறிவித்தல்.*

*2023, ஓகத்து 09 ஆந் திகதிய இலக்கம்2344/22 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2023, ஓகத்து 17 ஆந் திகதிய இலக்கம் 2345/65 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2023, செத்தெம்பர் 25 ஆந் திகதிய இலக்கம் 2351/07 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2023, நவெம்பர் 05 ஆந் திகதிய இலக்கம்2356/43 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2024, சனவரி 13 ஆந் திகதிய இலக்கம் 2366/42 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

*2024, சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 2368/21 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல்.*

11. நீக்கப்பட்ட கட்டளையின்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனங்கள் இக்கட்டளையின்கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கம் சம்மேளனமாக கருதப்பட வேண்டும்.

## VI ஆம் பகுதி

### வரைவிலக்கணப்படுத்தல்

12. பதங்கள் தொடர்பில் வேறு விளக்கங்கள் அவசியப்படும் பட்சத்தில் அன்றி இக்கட்டளைகளில்-

"மெய்வல்லுநர் விளையாட்டு வீரர்" எனக் கருதப்படுவது சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் ஏதேனும் விளையாட்டின் அல்லது ஏதேனும் விளையாட்டு நிகழ்வில் பங்கேற்கும் நபரின் கருத்தாகும்.

"பந்தயம் பிடித்தல்" எனக் கருதப்படுவது மற்றும் அதற்காக கீழ்குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடங்கியுள்ளது-

(அ) ஏதேனும் விளையாட்டு வீரர் அல்லது நிகழ்வின் பெறுபேறுகள், முன்னேற்றங்கள், அதன் நிலைப்பாடுகள் அல்லது அதன் ஏனைய பிரிவுகள் தொடர்பாக (தனித்தனியாக, கூட்டாக அல்லது வேறு முறையில்) வேறு ஏதேனும் தரப்பினருடன் பந்தயம் பிடித்தல், வரவேற்றல், அல்லது வேறு முறையில் பந்தயம் பிடித்தல்.

(ஆ) ஏதேனும் போட்டி அல்லது நிகழ்வு அல்லது விளையாட்டின் பெறுபேறுகள், முன்னேற்றம், அதனை நடாத்துதல் அல்லது அதன் ஏனைய பிரிவுகள் தொடர்பாக பந்தயம் பிடிப்பதற்காக வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்தல், ஆர்வமூட்டல், விருப்பத்தினைப் பெற்றுக்கொள்ளல், ஆலோசனை வழங்குதல், தமது பக்கம் சார்பாக்கிக் கொள்ளல், ஊக்குவித்தல், வசதிகளை வழங்குதல் அல்லது அதிகாரத்தினை வழங்குதல்.

(இ) விளையாட்டு வீரரின் அறிவுக்கு அமைய ஏதேனும் சம்பவம் பந்தயத்திற்கு உரியதாக காணப்படல் மற்றும் அதற்காக அவர் ஊக்குவிப்பினை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் சம்பவம் போட்டி அல்லது நிகழ்வில் அல்லது விளையாட்டின் போதான நிகழ்வினை உறுதிப்படுத்தல்.

"ஊழல்" என்பது ஏதேனும் போட்டி அல்லது நிகழ்வின் பயனாக முன்னேற்றம் மற்றும் அதனை நடாத்துவது தொடர்பில் அல்லது அதன் ஏனைய பிரிவுகள் தொடர்பாக முறையற்ற ரீதியில் தாக்கம் செலுத்தக்கூடியவாறு ஏதேனும் முறையில் அல்லது வேறு முறையில் திட்டமிடல் அல்லது மூலோபாங்களை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறு முறையற்ற ரீதியில் தாக்கம் செலுத்தக் கூடியவாறு ஏதேனும் முறைக்கு அல்லது வேறு முறைக்கு திட்டமிடல் அல்லது மூலோபாயத்தினை மேற்கொள்வது தரப்பினராக இருப்பதாக கருதப்படுகின்றது.

"ஊக்க மருந்து பயன்பாடு" எனக் கருதப்படுவது 2013, இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்க மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு எதிரான இணக்க சட்டம் அல்லது அதன் ஏதேனும் மறுசீரமைப்பிற்கு அமைய ஏதேனும் குற்றமாக கருதப்படும்.

"பிரதான விளையாட்டுப் போட்டி" "விளையாட்டுப் போட்டி" அல்லது "போட்டி" எனக் கருதப்படுவது தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளத்தினால் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு அமைய அமைச்சரினால் காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கக்கூடிய போட்டித் தொடர் விளையாட்டுப் போட்டி அல்லது ஏனைய போட்டியாக கருதப்படும்.

"தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனம்" எனக் கருதப்படுவது விளையாட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணமாக கருதப்படுவதுடன் அது தேசிய விளையாட்டுச் சங்கம் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

"விளையாட்டுச் சட்டம்" எனக் கருதப்படுவது 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுச் சட்டம் அல்லது அதன் ஏதேனும் மறுசீரமைப்பாக கருதப்படும்.

"விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட குற்றங்களை தடுக்கும் சட்டம்" எனப்படுவது 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கம் கொண்ட சட்டமாக கருதப்படும்.

(2 ஆவது கட்டளை)

I ஆம் உப ஆவணம்

**"அ" மாதிரிப்படிவம்**

**தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின்பெயர்: ...........

2. முகவரி :

3. தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் தாபிக்கப்பட்ட திகதி .............

4. விளையாட்டு அல்லது விளையாட்டுக் குழுக்களின் பெயர்.........

5. கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது:

   (அ) இங்கு III ஆம் உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வழிகாட்டல் ஆலோசனையாக உள்ளடங்கும் அச்சங்கத்தின் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி : ஆம்/இல்லை.

   (ஆ) அச்சங்கத்தின் பெயர், அலுவலக முகவரி மற்றும் தொடர்பு சாதனத்திற்காக தகவல்கள் மற்றும் அதன் தேசிய சங்கத்தின்/சம்மேளனத்தின் குழுவின் தற்போது பதவி வகிக்கும் உத்தியோகத்தரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு சாதனத்திற்கான தகவல்கள் ஆம்/இல்லை.

   (இ) அவ் உத்தியோகத்தரை தேர்ந்தெடுத்த வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தின் அறிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி: ஆம்/இல்லை.

   (ஈ) முன்னைய ஆண்டிற்காக அத்தேசிய விளையாட்டுச் சங்கத்தின் கணக்காய்வு கணக்குகளில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி: ஆம்/இல்லை (உரியதாயின்)

   (உ) அச்சங்கத்தின் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் குழு அங்கத்தவர்களின் பெயர், முகவரி மற்றும் ஏனைய தொடர்பு சாதனத்திற்கான தகவல்களை உள்ளடக்கிய விபரங்கள்: ஆம்/இல்லை

6. மேற்கூறப்பட்ட குழுவின் தற்போதைய உத்தியோகத்தர்களை தேர்ந்தெடுத்த வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் இடம்பெற்ற திகதி : ................

பதிவு செய்யும் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பதற்கு முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட (தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் பெயர்) பொதுச்சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட யோசனைக்கு அமைய விண்ணப்பிக்கப்படும்.

(யோசனை அங்கீகாரத்தின் பிரதி மற்றும் கூட்டத்தின் அறிக்கைகளின் பிரதியினை இணைக்கவும்)

தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தலைவரின் ஒப்பம்:

பெயர் மற்றும் முகவரி:

திகதி:

செயலாளரின் ஒப்பம்:

பெயர் மற்றும் முகவரி:

விண்ணப்பதாரியின் ஒப்பம்:

*(2 அவது கட்டளை)*

**“அ” மாதிரிப்படிவம்**

**தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தின்பதிவு தொடர்பான சான்றிதழ்**

தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் பெயர்: ..........

*20 ........ மாதம் ........ ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில்................ (விளையாட்டின் பெயர்) தொடர்பாக தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்திற்காக 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுச் சட்டத்தின் 29 ஆவது வாசகத்தின்கீழ்............. பதிவுசெய்யப்பட்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். சங்கத்திற்காக வழங்கப்பட்ட பதிவு செய்யும் இலக்கம் .......... ஆகும்.*

----,
விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம்.

திகதி ..............

*2 ஆவது கட்டளை)*

**“இ” மாதிரிப் படிவம்**

**தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தில் பதிவு செய்வது தொடர்பான சான்றுப்பத்திரம்**

(1) விளையாட்டுக்கள் அல்லது விளையாட்டுக் குழுக்களின்பெயர்: ...................

(2) விளையாட்டுச் சட்டத்தின் 28 ஆவது வாசகதத்தின் கீழ் கட்டளைகள் தொடர்பான

 (1) வர்த்தமானி அறிவித்தல் திகதி /இலக்கம்: ................

 (2) விளையாட்டு அமைச்சின்/விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின்கோவை

(3) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனமாக முதல்பதிவு திகதி: .................

(4) சங்கத்தின் மற்றும் பதவி வகிப்போரின் முகவரி மற்றும் தொடர்பு சாதனத்திற்கான தகவல்கள்

(5) பதிவினை முன்னர் இரத்து செய்தல்/இடைநிறுத்தல் இடம்பெற்று இருப்பின் இரத்துசெய்யப்பட்ட /இடைநிறுத்தப்பட்ட திகதி:

(6) இடைக்காலக் குழு (இருப்பின் மற்றும் கால எல்லை) ..................

(7) வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நடாத்தப்பட்டதா? ஆம்/இல்லை திகதி:

(8) வருடாந்த கணக்கு கணக்காய்வாளரினால்கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டதா: ஆம்/இல்லை

(9) யாப்பு பணிப்பாளர் நாயகத்தினால் பதிவு செய்யப்பட்டது: ஆம்/இல்லை ....... திகதி

(10) நடாத்தப்பட்ட தேசிய விளையாட்டுப் போட்டித் தொடர்கள்: ...............

*(7 ஆவது கட்டளை)*

**“ஈ” மாதிரிப்படிவம்**

**அ பகுதி**

**தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்கு /சம்மேளனத்திற்கு நேரடியாக இணைப்பு செய்யப்பட்டுள்ள அங்கத்துவ ஆவணம்**

(1) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேனத்தின் பெயர்:

(2) இணைந்த நிறுவனத்தின் பெயர்: ..................

(3) அங்கத்தவர்களின் எண்ணிக்கை: ...........---

(4) வருடாந்த பொதுச்சபைக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின்

(5) வருடாந்த பொதுச்சபைக் கூட்டங்களில் அங்கத்தவர்களுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள வாக்குளின் எண்ணிக்கை: .........

(6) அங்கத்தவர்களின்பெயர்: .......

(7) உத்தியோகத்தரின் பதவிப் பெயருடன் பெயர் மற்றும் முகவரிகள்: ...............

(8) குழு அங்கத்தவர்களின் பெயர் மற்றும் முகவரி : ..........

**ஆ பகுதி**

**மாகாண சங்கம், மாவட்டச் சங்கம், கூட்டிணைந்த சங்கம், லீக் அல்லது தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்கு/ சம்மேளனத்திற்கு இணைந்த வேறு ஏதேனும் அமைப்புக்களின் அங்கத்தவர்களின் ஆவணம்**

(1) மாகாண சங்கத்தின், மாவட்டச் சங்கத்தின், கூட்டிணைந்த சங்கத்தின் லீக்கின் அல்லது ஏனைய அமைப்புக்களின் பெயர்: .........

(2) முகவரி : ......

(3) இணைந்த நிறுவனத்தின் பெயர்: .............

(4) முகவரி :.............

(5) அங்கத்தவர்களின் எண்ணிக்கை :.............

(6) பதிவிப் பெயருடன் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் முகவரிகள் :.............

(7) குழு அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்: ...............

*(2 ஆவது கட்டளை)*

**11 ஆவது உப ஆவணம்**

**விளையாட்டுக்களின் பெயர்கள்**

1. பூப்பந்து
2. நீர்விளையாட்டு
3. உடற்பயிற்சி
4. துவிச்சக்கர வண்டி
5. ரைபல்
6. ஹொகி
7. கரதே தோ
8. படகோட்டம்
9. றக்பி
10. பாரம்தூக்குதல்
11. ஜிம்நாஸ்டிக்
12. கொல்ப்
13. மல்யுத்தம்
14. மோட்டர் பந்தயம்
15. கூடைபந்து
16. மெய்வல்லுநர்விளையாட்டு
17. கிரிகட்
18. வலைப்பந்து
19. டெனிஸ்
20. பிரிஜ்
21. கரம்
22. ஜிம்நாஸ்டிக்
23. குத்துச்சண்டை
24. ஜூடோ
25. பிலியட் மற்றும் ஸ்னூக்கர்
26. காற்பந்து
27. கரப்பந்து
28. எல்லே
29. செஸ்
30. படகோட்டம்
31. மேசைப்பந்து
32. ஸ்கொஸ்
33. டைகொண்டோ
34. மென்பந்து கிரிகட்
35. பழுதூக்குதல்
36. கபடி
37. அங்கவீனர்களுக்கான விளையாட்டு (பராஒலிம்பிக்)
38. மோட்டார் சைக்கிள் விளையாட்டு
39. கூடைப்பந்து
40. வுசூ
41. துரோ போல்
42. வில் எரிதல்
43. குதிரைப்பந்தயம்
44. சம்பிரதாய கராட்டி
45. கைப்பந்து
46. கயிறுமுத்தல்
47. குறிபார்த்து சுடல்

48. பென்சின் (வால்வெட்டு)
49. சக்கர நாற்காலி
50. செபக்டஸ்க்ரோ
51. சுமோ
52. மெடர்ன் பென்டத்லோன்
53. புஜிட்சோ
54. சம்போ
55. கோகோ
56. அங்கம்பொர
57. குதோ
58. போல்ரூம்டான்ஸ்
59. ரோல்போல்
60. மலைஏறுதல்
61. கனொய்ன் மற்றும் காயகின்
62. ஸ்கிரபல்
63. முய்தாய்
64. யுனிபர்ஸ்ட்
65. பவர்போட்
66. சர்பின்
67. போல்பட்மின்டன்
68. பிரான்ஸ்சவாட்
69. லோன்போல்
70. ஈஸ்போட்
71. அடெக்போல்
72. ஜிட்குண்டோ
73. கோப்போல்

(2,3 மற்றும் 5 ஆவது கட்டளை)

## III ஆவது உப ஆவணம்

### தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் யாப்பிற்கு உரியதான விடயங்கள்

அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளளங்களுக்குரிய கீழ்குறிப்பிடப்பட்டவாறு விபரிக்கப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக யாப்பு இருக்க வேண்டும்.

(1) உரிய தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தினால் அனைத்து ஆண்டு தோறும் நிதி ஆண்டு நிறைவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அல்லது அன்றைய தினம் கணக்காய்வுடன் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்துதல்.

(2) யாப்பிற்கு அமைய மற்றும் சுதந்திர மற்றும் நியாயமாக தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் குழு உத்தியோகத்தர்களை தேர்ந்தெடுப்பதற்காக உத்தியோகத்தர் தெரிவினை நடாத்துதல்.

(3) தமது இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் வாக்கு உரிமை மற்றும் பிரதிநித்துவப்படுத்தும் முறைகள்.

(4) தமது உரிய நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் வழங்கப்படும் உத்தியோகபூர்வ கட்டளைக்கு அமைய செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டிய வாக்களிக்கும் உரிமைக்குரிய இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கு வழங்குதல்.

(5) உரிய மாவட்டத்தில் உரிய இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்களின் செயற்பாடுகளை இணைப்பு செய்யும் பொறுப்பு வழங்கப்படும் மாகாண மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களை நியமித்தல் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு அது தொடர்பில் அறிக்கைப்படுத்தல்.

*(6) உரிய இணை பாடசாலை சங்கங்களினால் பெயரிடுவதற்கு அமைய, இரண்டு முகவர்களை விட குறையாத இணைந்த பாடசாலை சங்க எண்ணிக்கை அதன் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் தீர்மானம் எடுக்கும் குழுவிற்கு நியமித்தல் மற்றும் நியமிப்பவருக்கு வாக்குரிமைகள் இருக்கின்றதா தீர்மானிப்பதற்காக அத்தேசிய சங்கத்திற்கு /சம்மேளனத்திற்கு தீர்மானம் எடுக்கும் குழுவிற்கு நியமித்தல் மற்றும் நியமிப்பவருக்கு வாக்குரிமை இருக்கின்றதா என்று தீர்மானிப்பதற்காக அதன் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு /சம்மேளனத்திற்கு வாய்ப்புக்களை வழங்குதல்.*

*(7) குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்களின் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் குறைந்தபட்சம் பாடசாலை சங்கங்களின் பிரதிநிதிகள் ஒருவரேனும் அவ்வாறான கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.*

*(8) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் தொடர்பாக தமது இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் நாற்பது நாட்களை விட குறையாத அறிவித்தலை எழுத்துமூலம் வழங்குதல்.*

*(9) வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு குறைந்தபட்சம் இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய நிதி ஆண்டிற்குரியதாக கணக்காய்வு நிதி வெளிப்பாட்டின் பிரதியினை வழங்குதல்*

*(10) அந்தந்த நபருக்கு அறிவிப்பதற்கு உரிமை கொண்ட வாக்கு எண்ணிக்கையினை விஷேடமாக குறிப்பிட்டு அவ்வாறான வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு வருகைதந்து வாக்களிப்பதற்கு தகைமை கொண்ட அங்கத்தவர்களின் பட்டியல் தமது அங்கத்துவ இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கு வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்திற்கு குறைந்தபட்சம் இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் வழங்குதல்.*

*(11) பங்கேற்க வேண்டிய போட்டிகளில் போட்டித் தொடர்கள், போட்டிகள் அல்லது பங்கேற்காதுள்ள ஏதேனும் அங்கத்துவ இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களிற்கு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வாக்களிக்கும் உரிமையினை இழத்தல், மற்றும் புதிய அங்கத்துவராக ஏற்றுக்கொள்ளப்படும் கட்டத்தில் புதிய அங்கத்துவ வாக்குரிமையினை வழங்காது இருத்தல்.*

*(12) தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்திற்கு புதிய குழுவினை நியமிப்பதற்கு முன்னர் காணப்பட்ட குழுவின் குழுவில் இருந்த உத்தியோகத்தர்களினால் அச்சங்கத்திற்கு உரிய விடயங்கள் தொடர்பில் அனைத்து ஆவணங்கள், பாஸ்போட், வங்கிக் கணக்கு விபரங்கள் மற்றும் இலத்திரணியல் புள்ளிவிபரங்கள் அதன் புதிய குழுவினை நியமித்த தினம் தொடக்கம் ஏழு நாட்களுக்குள் அப்புதிய குழுவிற்காக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பளிப்பது கட்டாயமானதாகும்.*

*(13) உத்தியோகத்தர் தெரிவுக் குழுவின் தீர்மானம் எடுக்கும் குழுவின் தெரிவுக் குழுவின், வகைப்படுத்தல் குழுவின் அல்லது தரப்படுத்தல் குழுவின், தொழில்நுட்பக் குழுவின், நிதிக் குழுவின், மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் உத்தியோகத்தர்களை நியமிக்கும் உத்தியோகத்தர் தெரிவு, நீக்குதல், உத்தியோகத்தர்களின் தகைமை, உள்ளீடு, கால எல்லைக்குள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஒழுங்குக் கோவையில் விஷேடமாக குறிப்பிடுதல்.*

*(14) வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் தமது வாக்கினை வழங்குவதற்காக இணை நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள்அல்லது ஏனைய அமைப்புக்களினால் பெயரிடப்படும் நபர்களின் பெயர், வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு / உத்தியோகத்தர் தெரிவிற்கு, குறைந்தபட்சம், இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் தேசிய சங்கத்திற்கு/சம்மேளனத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று ஒழுங்குவிதியினை விதித்தல்.*

*(15) நடப்பெண் இன்மையினால் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு/ சம்மேளனத்திற்கு வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இந்நிகழ்ச்சி நிரலிற்காக கூட்டத்தினை மீண்டும் கூட்டுமாறு பதிநான்கு நாட்களுக்கு முன்னர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும் என்ற ஒழுங்குவிதிகள்*

*(16) அங்கத்துவ இணை சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் கணக்குப் புத்தகங்களை உரியவாறு முன்னெடுப்பதனை கட்டாயப்படுத்தல்.*

*(17) அங்கத்துவ இணை சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்பு வருடாந்த பொதுச்சபைக் கூட்டம், முறையான உத்தியோகத்தர் தெரிவு மற்றும் கணக்குகளை முன்னெடுப்பதற்கு தவறும் பட்சத்தில் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு பங்கேற்றல் மற்றும் வாக்குகளை வழங்குதல் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் உத்தியோகத்தர் தெரிவின்போது வாக்களிக்கும் உரிமையினை இழப்பதாக குறிப்பிடுதல்.*

*(18)* எவரேனும் ஒரு நபருக்கு இலங்கைப் பிரசை மற்றும் விளையாட்டு பின்னணி கொண்ட நபராக இல்லாத சந்தர்ப்பத்தில் அவர் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு /சம்மேளனத்தின் பிரதிநிதி அல்லது அதன் முகவராக அதற்கு உரிய சர்வதேச கூட்டிணைந்த சங்கத்திற்கு அல்லது ஏனைய சர்வதேச சம்மேளனத்திற்கு நியமிக்கப்படுவதில்லை என உறுதிப்படுத்தல்.

*(19)* தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் பயிற்றுவிப்பாளர்கள், போட்டி நடுவர்கள் மற்றும் விளையாட்டு நடுவர்களை நியமித்தல் மற்றும் அவ்வாறான பயிற்றுவிப்பாளர்கள், போட்டி நடுவர்கள் மற்றும் தீர்மானிப்பவர்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒழுங்குவிதிகளை விதித்தல்.

*(20)* உரிய சர்வதேச கூட்டிணைந்த சங்கங்களின் உரியதாக குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக தமது விளையாட்டு வீரர்கள், அங்கத்தவர்கள், பயிற்றுவிப்பாளர்கள், நடுவர்கள், தீர்மானிப்பவர்கள் மற்றும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஒழுக்க விழுமிய முறைமையினை வகுத்தல்.

*(21)* தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்துடன் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் பொறுப்புக்களை விஷேடமாக குறிப்பிடுதல்.

*(22)* உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவக சட்டக்கோவை மற்றும் இலங்கை ஊக்கமருந்து தடுப்பு சட்டக்கோவைக்கு அமைவாக செயற்படல்.

*(23)* விளையாட்டுக் குழுவினை நியமித்தல் மற்றும் சர்வதேச விளையாட்டு அமைப்புக்களின் யாப்பிற்கு அமைய விளையாட்டு பிரதிநிதிகள் அவற்றின் நிருவாக சபைக்கு சேர்த்துக் கொள்ளல்.

*(24)* அந்தந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் போது உரிய யாப்பின் ஒழுங்குவிதிகளின் கீழ் வருடாந்தம் பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்துதல் அல்லது விஷேட பொதுச்சபைக் கூட்டம் அல்லது விஷேட பொதுச்சபைக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும் என்று விஷேடமாக குறிப்பிடுதல்.

*(25)* சர்வதேச விளையாட்டு அமைப்பின் ஒழுங்குவதிகள் மற்றும் இலங்கையின் சட்டத்திற்கு இடையில் விரிசல் ஏற்படும் பட்சத்தில் இலங்கையின் சட்டம் அமுலில் இருக்கும் என்பதனை விஷேடமாக குறிப்பிடுதல்.

*(26)* இலங்கையில் அனைத்து கிராம அலுவலர் பிரிவிலும் விளையாட்டினை ஊக்குவிப்பதற்காக பிரதேச விளையாட்டுக் கழகங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்களை தாபிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்று விஷேடமாக குறிப்பிடுதல், விளையாட்டிற்கு அன்பு செலுத்தும் அனைத்து பிரசைகளுக்கும் தாம் விரும்பிய விளையாட்டில் ஈடுபடும் மனிதாபிமான உரிமையினைப் பெற்றுக்கொள்வது அவ்வாறான விளையாட்டுச் சங்கத்தின் பொறுப்பாகும்.

EOG *05-0020*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.